IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

STC No. 534/2021

**Pw**1 – சுரேஷ் **S/o**. கிங்கேஸ்வரன்

**Accused Absent**. 317 **crpc petition filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 31.07.2026.**

**மனு அனுமதிக்கப்பட்டு பு.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் ஜெகா கார்மெண்ட்ஸ் கம்பெனியில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் எந்த கம்பெனியில் வேலை செய்தேன் என்றால் SHP process ல் வேலை செய்தேன். வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை நான் வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன் என்றால் எனக்கு தற்போது சரியாக நினைவில் இல்லை எனது ஆடிட்டரிடம் கேட்க வேண்டும். எதிரிக்கு கடன் கொடுத்த விவரத்தை எனது ஆடிட்டரிடம் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எதிரி எனக்கு உறவினரா என்றால் இல்லை நண்பர் ஆவார். எதிரி எவ்வாறு பழக்கம் என்றால் எதிரி கால்நடை மருத்துவர் ஆவார். கால்நடைகளுக்கு மருத்துவம் பார்க்க வரும்போது எனக்கு நண்பர் ஆவார்.**

2. எதிரிக்கு எந்த தேதியில் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் 17.01.2021 ம் தேதி என்னுடைய வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன் . எதிரி எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றால் பணம் வாங்கிய அன்றைய தினமே காசோலையை கொடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரத்தில் பணம் வாங்கிய அன்றைய தினமே எதிரி காசோலையை கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை